**தென்பகுதி வீதி இணைப்பு செயற்திட்டம் - 2015**

தென்பகுதி வீதி இணைப்பு செயற்திட்டத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2014 மே 27 ஆந் திகதிய 3028 - எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் I ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சாகவிருந்த தற்போதைய உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. அதிவேக வலையமைப்பை இணைக்கின்ற தேசிய நெடுஞ்சாலைகளின் திரையிடல் சாத்தியவள ஆய்வு மற்றும் விபரமான பொறியியல் வடிவமைப்புக்கள் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 801.34 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 6.08 மில்லியனானதுடன் அதில் ரூபா 659 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 5 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் வழங்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2014 ஆகஸ்ட் 22 ஆந் திகதி ஆரம்பித்திருந்ததுடன் 2019 யூன் 30 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது. அதிவேகப்பாதை வலையமைப்பை இணைக்கின்ற தேசிய நெடுஞ்சாலைகளின் திரையிடல், சாத்தியவள ஆய்வு மற்றும் விபரமான பொறியியல் வடிவமைப்புக்களின் கீழான ஆலோசனைச் சேவைகள் 2014 திசெம்பர் 09 இல் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2016 யூன் 09 இல் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிடப்பட்டிருந்தது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது

அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கட்டுநிதிக் கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் மற்றும் அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்ததா என்பதும்

(உ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(ஊ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(எ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(ஏ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஒ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1. அபிப்பிராயம்**

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் பந்தி 2.2 இல் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழுகின்ற சீராக்கங்களின் தாக்கங்களைத் தவிர்த்தும்,

(அ) செயற்திட்டமானது 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) கட்டுநிதிக் கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் மற்றும் அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தன என்பதுடன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தது என்றும்,

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க, மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக, சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்திருந்தது என்றும்,

(உ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(ஊ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்**

நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட காசுப்பாய்ச்சல் கூற்று இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 02 இற்கிணங்க தயாரிக்கப்படாமையால் காசு உட்பாய்ச்சல்களும் வெளிப்பாய்ச்சல்களும் நிதி நிலைமைக் கூற்றுக்களில் காட்டப்பட்ட ஏனைய மீதிகளுடன் இணங்கியிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

(அ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்தவேண்டிய ரூபா 9.10 மில்லியன் ஆலோசனைக் கட்டணங்கள் கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவால் நிதிநிலமைக் கூற்றில் காட்டப்பட்டுள்ள நடைமுறை வேலை மற்றும் நடைமுறைப் பொறுப்புக்களின் மீதிகள் அதே தொகையால் குறைத்துக்காட்டப்பட்டிருந்தது.

(ஆ) ''வடக்கு வீதி இணைப்பு செயற்திட்டம்'' என அழைக்கப்பட்ட வேறு நன்கொடை நிதியளிக்கப்பட்ட செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் இச் செயற்திட்ட நோக்கத்திற்காக ஸ்தாபிக்கப்பட்ட அதே செயற்திட்ட கண்காணிப்பு பிரிவால் மேற்பார்வை செய்யப்பட்டிருந்ததுடன் செயற்திட்டத்தின் செயற்பாட்டு செலவினம் உரிய செயற்திட்டங்களிற்கிடையில் பகிரப்படாமல் அந்த செயற்திட்டத்திற்கு நேரடியாக சாட்டுதல் செய்யப்பட்டிருந்தது. இதன் விளைவால் செயற்திட்டத்தின் அதிகரிப்பு கிரய கூறின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ரூபா 39.59 மில்லியன் தெகையான ஒதுக்கங்கள் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முழுமையாக பயன்படுத்தப்படாதிருந்ததென அவதானிக்கப்பட்டது.

### 2.2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

ஆலோசனை உடன்படிக்கையின் விஷேட நிபந்தனையின் 45.1(அ) ஆம் உட்பிரிவின் பிரகாரம், ரூபா 25.39 மில்லியனுக்கு சமனான ஐ.அ.டொலர் 193,782 முற்பணக் கொடுப்பனவு மற்றும் ஒப்பந்த பெறுமதியில் 15 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 19.37 மில்லியன் ஒப்பந்த காலத்தின் 5 தொடக்கம் 12 வரையான மாதங்கள் இடைவெளியில் மாதாந்த ஆலோசனைக் கொடுப்பனவிலிருந்து 08 சமனான தவணைக்கட்டணங்களாக அறவிடப்படுவதற்கு வேண்டப்பட்டிருந்தது. அதற்கிணங்க, ஆரம்ப முற்பணம் 2015 நவம்பர் அளவில் முழுமையாக அறவிடப்பட வேண்டும். எனினும், 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தால் ரூபா 204.51 மில்லியன் தொகையான ஆலோசனைக் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டத்தால் ஆரம்ப முற்பணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. மேலும், ஆலோசனையாளரால் அதற்காக சமர்ப்பிக்கப்பட்ட உத்தரவாதமுறிகள் 2015 நவம்பர் 30 இல் காலாவாதியாகியிருந்தன.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2015 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலம் | கடன் உடன்படிக்கையின் பிரகாரம் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான வருடாந்த மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஏடிபீ | 5.00 | 659.00 | 201 | 1.3 | 150.71 | 1.48 | 195.47 |
| இலங்கை அரசாங்கம் | 1.08 | 142.34 | 5 | - | 5.00 | - | 5.00 |
| | **6.08** | **801.34** | **206** | **1.3** | **155.71** | **1.48** | **200.47** |

## 3.2 பௌதீக முன்னேற்றம்

**பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.**

(அ) ரூபா 461.61 மில்லியனுக்கு சமனான ஐ.அ.டொலர் 2.27 மில்லியன் கிரயத்தில் வெளிநாட்டு ஆலோசனை நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்த தெற்கு அதிவேக பாதையை இணைக்கின்ற தேசிய நெடுஞ்சாலைகளின் 200 கிலோமீற்றர்களின் திரையிடல், சாத்தியவள ஆய்வு மற்றும் விபரமான பொறியியல் வடிவமைப்பு போன்றவற்றிற்கான ஆலோசனை சேவைகளை வழங்குவதற்கான பிரதான ஒப்பந்தம் 2014 திசெம்பர் 09 இல் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2016 யூன் 09 இல் பூர்த்திசெய்வதற்கு பட்டியலிடப்பட்டிருந்தது. செயன்முன்னேற்ற அறிக்கைகளின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வேலைகளின் 60 சதவீதம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மேலும், பாலம்/ கட்டமைப்பு பொறியியலாளர்கள், அதிவேக வீதி பொறியியலாளர் மற்றும் போக்குவரத்து திட்டமிடுதலுக்கான பொறியியலாளர், ஆகிய பெயர்களிலான ஏனைய ஆலோசனையாளர்கள் பிரதான ஒப்பந்தக்காரர்களுக்கு உதவி செய்வதற்காக ரூபா 51.87 மில்லியன் கூட்டுத்தொகையான ஊதியத்தில் தனிப்பட்ட ஒப்பந்தக்காரர்களாக நியமிக்கப்பட்டிருந்ததுடன் அவர்களுக்காக ஒதுக்கப்பட்ட வேலைகளை 2016 மார்ச் 31 அளவில் பூர்த்திசெய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. எனினும், பாலம்/கட்டமைப்புப் பொறியிலாளருக்கு ஒதுக்கப்பட்ட வேலைகள் மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு பௌதீக செயன்முன்னேற்றத்தின் 30 சதவீதத்தை மாத்திரம் அறிக்கையிட்டிருந்தது.

## 3.3 ஒப்பந்த நிர்வாகம்

2014 திசெம்பர் 09 இல் ஆலோசனை வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் பெறுமதி சேர் வரிகள் மீதான விலக்கு தொடர்பான வேண்டுதல் செயற்திட்டத்தால் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடமிருந்து 05 மாத காலதாமதத்துடன் 2015 மே 19 இலேயே மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதன் விளைவால், ரூபா 6.78 மில்லியன் மற்றும் ரூபா 1.23 மில்லியன் தொகையான முறையே பெறுமதி சேர் வரிகள் மற்றும் தேசத்தை கட்டியெழுப்பல் வரி என்பன செயற்திட்டத்தால் செலுத்தப்பட்டிருந்தது.